3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்படுவதற்கான அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> " பேரவையின் 25 (1)-ஆவது விதியின் படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படலாம்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்,

மறுப்போரே இல்லை,

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.27 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

74. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்--மண்டலம் 3-ல் அடங்கியுள்ள நிலங்களுக்கு விவசாயத்திற்காக நீர் வழங்குவதை முறைப்படுத்துவது குறித்து பொதுப்பணித் துறையின் *9-8-1995*-ஆம் நாளிட்ட *839*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [*1993*-ஆம் ஆண்டு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட (நீர்வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *20/1993*) *9 (3)* பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).]

75. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லரை விற்பனை) விதிகளில் திருத்தம் செல்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 10-3-1995-ம் நாளிட்ட 46-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

76. திருவாளர்கள் சேரன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான மின்கலங்களால் இயங்கும் ஐந்து சிறிய பயணிகள் பேருந்துகளுக்கு 3-8-1994-முதல் ஒரு ஆண்டிற்கு வாகன வரி விதிப்பிலிருந்து விலக்களித்தல் குறித்து உள் (போக்குவரத்து)துறையின் 11-7-1995-ஆம் நாளிட்ட 692-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது.)

77. சென்னை, தமிழ்நாடு பீங்கான் நிறுவனம், 1984-85 முதல் 1990-91 வரை செலுத்த வேண்டிய வரி, தண்டத் தீர்வை, மேல்வரி, கூடுதல் வரி, ஆகியவைகளை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 28-3-1995-ஆம் நாளிட்ட 12-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்) (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவு; 1971-ம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) பிரிவு மற்றும் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) பிரிவுகளின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

78. 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்வது குறித்து கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 18-4-1995-ஆம் நாளிட்ட 82-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 180 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

79. 1957-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்வது குறித்து உள் (திரைப்படங்கள்-3) துறையின் 20-3-1995-ஆம் நாளிட்ட 439-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

80. கோயமுத்தூர் மாவட்டம் அன்னூர் அங்காடியைச் சேர்ந்த அறிவிக்கப்பட்ட அங்காடி பகுதிக்குள் அமைந்துள்ள மூப்பேரிப்பாளையம் கிராமத்திற்குட்பட்ட வாகரயம்பாளையம் கிராமத்தில் சில வேளாண் விளை பொருட்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் வசதியாக துணை அங்காடி ஒன்றினை ஏற்படுத்த கோயம்புத்தூர் அங்காடிக் குழுவிற்கு முன் அனுமதி அளிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் *5-6-1995*-ஆம் நாளிட்ட *283*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (*1987*-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *27/1989*) *52 (4)* (சி) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

81. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளில் திருத்தம் செய்வது குறித்து, உள் (போக்குவரத்து-7) துறையின் *17-2-1994*-ஆம் நாளிட்ட *185*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (*1988*-ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *59/1988*) *212 (3)* பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

82. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தம் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் *16-8-1995*-ஆம் நாளிட்ட *260*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (*1959*-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53 (5)* பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

83. எண்ணெய் விதைகள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்படவேண்டிய கொள்முதல் வரியினை *31-7-1992*-ஆம் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு தள்ளிப் போடுவது குறித்து, வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் *11-8-1995*-ஆம் நாளிட்ட *258*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [*1959*-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53 (5)* பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

84. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட படிவம் XXVII-ல் திருத்தம் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் *12-10-1995*-ஆம் நாளிட்ட *326*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (*1959*-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

மேற்கோள் நூல்

85. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வர்த்தக நிறுவனங்களை பதிவு செய்ய வேண்டும் என்று விதியிலிருந்து இரண்டாவது அல்லது அதற்கடுத்து விற்பனை செய்யும் குலுக்கல் சீட்டு விற்பனையாளர்களுக்கு விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6-10-1995-ஆம் நாளிட்ட 319-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [(தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

86. வருவாய்த் துறையின் 10-9-1969-ஆம் நாளிட்ட 315/1969-ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 26-9-1995-ஆம் நாளிட்ட 310-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [(தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

87. திருப்பூர், திருவாளர்கள் பிரேமா எலாஸ்டிக் டேப் 1982-83 முதல் 1985-86 வரை செலுத்த வேண்டிய வரி மேல்வரி மற்றும் கூடுதல் வரி ஆகியவைகளைத் தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 10-10-1995-ஆம் நாளிட்ட 456-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959-ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவு; 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) பிரிவு மற்றும் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் [(தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) பிரிவுகளின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை

தமிழ்நாடு சட்டமன்ற நூலகம்
11 டிச 2000
சென்னை-600 009